# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஆகஸ்டு 16, 2025

Weekly E-paper ● August 16, 2025




# தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்–பின்னணி!

கா.சு.நாகராசன்

## எங்கே 65 லட்சம் வாக்காளர்கள்?

சாரதாதேவி

## பெரியாரின் அடையாளம் ஜீன் ஜோசப்

தலையங்கம்

## கலைஞரின் படைப்புலகம்..!

நூல் அறிமுகம்: வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஆகஸ்டு 16, 2025 | Weekly E-paper ● August 16, 2025


# தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்–பின்னணி!

கா.சு.நாகராசன்

தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் இந்தளவுக்கு வளரவும், அரசியல் பொது தளத்தில் விவாதப் பொருளாகவும் , வெறும்வாய் மென்ற எதிரிகள் அவல் மெல்ல வாய்ப்பளிக்கப்பட்டது எப்படி?

இது ஏதேச்சையாக நடந்ததா? அல்லது திட்டமிட்டு அரசை நெருக்கடிக்கு உள்ளாக்க செய்யப்பட்ட ஏற்பாடா? என்பது குறித்து, கண்டிப்பாக ஆட்சித்தலைமை உண்மையைக்கண்டறியவேண்டும்.

திமுக ஆட்சி மற்ற கட்சிகளின் ஆட்சிகளில் இருந்து எங்கே மாறுபட்டிருக்கிறது ? என்று கேட்டால், அடிப்படையில் பார்ப்பனரல்லாத மக்களின் நலனில், முன்னேற்றத்தில்,அக்கறை கொண்ட ஆட்சியாக திமுகழக ஆட்சி எப்போதும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது. இதைப்பார்ப்பனர்கள்மிக எளிதாக விளங்கிக் கொண்டு திமுகவிற்கு எதிரான சூழ்ச்சித் திட்டங்களை மிக நுட்பமாக, மிக மிக நேர்த்தியாகக் கட்டமைத்து விடுகின்றனர். ஆனால்,ஒவ்வொருமுறையும்இந்த இடத்தில்பார்ப்பனர் அல்லாதார் நலனுக்கான இயக்கங்கள் இதை உணரத் தவறி விடுகின்றன.

திமுக என்பது தமிழ் காக்கும் இயக்கம், தமிழர் நலன் காக்கும் இயக்கம், தமிழ்நாட்டின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் இயக்கம், பார்ப்பனர் அல்லாத பிற்படுத்தப்பட்டச் சமூகத்திற்கான இயக்கம். பட்டியல் மற்றும் பழங்குடிச் சமூகங்களுக்கான இயக்கம். மதச்சிறுபான்மைச் சமூகங்களுக்கான இயக்கம். எல்லாச் சமூகத்திலும் ஒடுக்கப்பட்டிருக்கிற பெண்களுக்கான இயக்கம் திமுகழகம். இப்படிப் பட்ட பன்முகத்தன்மை திராவிட இயக்கத்தின் நீட்சி.

இதற்காகத்தான் திமுகவைப் பார்ப்பனர்கள் தங்களது பரம்பரை எதிரியாக இன்றளவும் கருதிச் செயல்படுகிறார்கள் . பார்ப்பன மேலாண்மையைப் பாதுகாக்க பார்ப்பனர்கள் எந்த எல்லைக்கும் போவார்கள் என்பதை வரலாறுக் காலத்தில் இருந்து பார்த்து வருகிறோம். இப்போது தூய்மைப் பணியாளர்களின் போராட்டத்திற்கு வருவோம்.

தூய்மைப் பணிகள் மட்டுமல்ல அநேக பணிகள் அநேக பொதுத்துறை நிறுவனங்கள் குறிப்பாக சேவைத்துறைகள் பல தனியார் மயப்படுத்தப்பட்டு பல ஆண்டு காலம் ஆகிவிட்டது.

தனியார்மயம் என்கிற உழைப்பைச் சுரண்டும் முதலாளித்துவக்



கட்டமைப்பை அடித்து நொறுக்குகிற அளவிற்கு மக்கள் சக்தியைத் திரட்டும் வலிமை உலகளவில் எந்தவொரு நாட்டுக்கும், எந்தவொரு பொதுவுடமை , புரட்சிகர இயக்கத்திற்கும் கூட இல்லை என்பதும், அதற்கான சமூகச் சூழல் இல்லை என்பதும் இங்கே உரிமைக் குரல் எழுப்புகிற அனைவருக்கும் நன்றாகவே தெரியும்.

அதற்காக நடப்பவற்றை எல்லாம் வேடிக்கை பார்த்துவிட்டுக் கடந்து போய்விட வேண்டுமா? அநீதிகளுக்கு எதிராக இனி யாரும் குரல் எழுப்பவே முடியாதா? என்றால் நிச்சயமாக குரல் எழுப்பியாக வேண்டும்.

சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களின் ஊதியக் குறைப்பு நடவடிக்கையை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் உடனடியாகக் கைவிட வேண்டும். அவர்கள் பணியாற்றுகிற காண்ட்டிராக்டர் யாராக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் அவர்கள் பெற்று வந்த ஊதியத்தில் கைவைப்பது கூடாது என்கிற கோரிக்கை தமிழ்நாடு அரசால் உடனடியாகத் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். அதை முன்வைத்து ஒரு போராட்டக் களம் உருவாவதையும், மக்கள் மடைமாற்றப் படுவதையும் அரசு தடுத்திருக்க வேண்டும். அதற்கான துரித நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்க வேண்டும். என்பதுதான் நமது கவலை.

அதேநேரம், போராட்டம் தொடங்கிய நாளிலிருந்து அரசும் பேச்சுவார்த்தையை நடத்திவருகிறது என்பதை அனைவரும் அறிவோம். பணிநீக்கம் இல்லை. ஊதியக்குறைப்பு இல்லை. இவை இரண்டும் தான் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் கோரிக்கை. மாண்புமிகு மேயர் அவர்கள் ஊடக செய்தியிலேயே இதை உறுதிப்படுத்துகிறார்.

ஆனாலும்போராட்டம்நீடிக்கிறதுஎன்கிறபோதுஇங்கேவேறுஏதோஒன்று

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

## முன்பக்கத் தொடர்ச்சி...

திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு சிரமமில்லை. உழைக்கும் மக்கள் எதன்பொருட்டோ ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். மக்களின் உரிமைக் குரலுக்குத் துணை நிற்கிறோம் என்கிற போர்வையில், தொழிலாளர் போராட்டத்தை ஆதரிக்கிறோம் என்ற பெயரில், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவு தருகிறோம் என்ற அடையாளத்தில் வந்து , எளிய மக்களின் பிரதிநிதியாக செயல்பட்டு வருகிற திமுகவை அம்மக்களுக்கு எதிரானதாகக் காட்டுகிறார்கள். திமுகழக அரசை அசைத்துப் பார்க்கிற ரகசிய வேலைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு சிலர் திட்டமிட்டே முனைகிறார்கள். எனில் , இதை எப்படி நாம் ஆதரிக்க முடியும்?

இன்னும் சொல்லப் போனால், சாமானிய மக்களை திமுக எதிர்ப்புப் போராட்டத்தின் முகமாகவும், அவர்களது கோரிக்கைகளைமிகைப்படுத்தித் தங்களது கேடயமாகவும் பயன்படுத்திக்கொண்டு நிற்பவர்கள் உண்மையில் சம்பந்தப்பட்ட மக்களுக்கே துரோகம் செய்கிறார்கள். இதுதான் பேச்சுவார்த்தை தோல்விக்கான தொடர் காரணங்கள்.




தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் என்ற பெயரில் திமுக அரசுக்கு எதிராக யாரெல்லாம் தொடைதட்டிக் கிளம்பியிருக்கிறார்கள்? அல்லது கிளப்பி விடப்பட்டிருக்கிறார்கள் ?

சனாதனத்தை நியாயப்படுத்தி உழைக்கும் மக்களை ஏளனப்படுத்துகிற அக்கிரஹாரத்து மாமிகள், தலித் விடுதலைப் போராளிகள் என்று கூறிக் கொண்டு ஜாதியைக் கூர்தீட்டுகிற பிரிவினை சக்திகள், ஜாதீயக் கண்ணோட்டத்தில் எப்போதும் திமுகவை தீண்டத்தகாத கட்சியாகக் கருதுபவர்கள், இவர்களோடு இனத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் இழுத்துக்கொண்டு போகிற சங்பரிவாரின் கூலிக் கும்பல், தொழிலாளர் உரிமைக்கான போராட்டக் காரர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளவர்கள், இனஉரிமைக் காவலர்களாக சொல்லிக் கொண்டு திமுகவை மட்டுமே தங்கள் எதிரியாகக் கருதுகிற போராளிகள், தாங்கள் தான் சரியான திராவிட இயக்கக் காப்பாளர்கள் என்று கூறிக்கொள்வோர் எனப்பலரும் கரம் கோர்த்து நிற்கிறார்கள்.

இவர்களே தூய்மைப் பணியாளர்களின் போராட்டக் களத்தை ஆக்கிரமித்து அந்த மக்களின் உண்மையான, தேவையான உரிமைக் குரலை ஏறக்குறைய பின்னுக்குத் தள்ளிவிட்டு திமுக எதிர்ப்பு என்கிற தங்கள் அஜன்டாவை அல்லது தங்களது சொந்தத் தேவையை சொறிந்துகொண்டிருக்கிறார்கள்.

அதுதான் இப்போது நடக்கிறது. மேற்கண்ட அத்தனை போராளிகளுக்கும் மையப்புள்ளி தூய்மைப் பணியாளர்களின் நலனோ, கோரிக்கையோ அல்ல. குறைந்தபட்சம் பொது ஜனநாயக உரிமைக் குரலோ, தொழிலாளர் நலனுக்கான முழக்கமோ கூட அவர்களிடம் இல்லை. அவர்கள் அனைவரது ஒட்டுமொத்த முழக்கமும்

" இதுதான் திராவிடமாடலா? "

" இதுதான் சமூகநீதியா? "

" இதுதானா விடியல் ஆட்சி ? "

" இந்தத்தடவை ஜெயிச்சுடுவியா?"

என்கிற வினாக்களை எழுப்பி,

திமுகவிற்கு எதிராக மக்கள் கருத்தை உருவாக்குவது மட்டுமே.

இது அவர்களுக்கே தெரியாமல் அவர்கள் மூளையில் ஏற்றப்பட்டுள்ள கடமையுணர்ச்சி சிலருக்கோ இதுவடிவமைக்கப்பட்ட வேலைத் திட்டம்.

திமுக ஆட்சிஎன்பதுஅப்படியொன்றும்முழுஇறையாண்மைகொண்ட சுதந்திர ஆட்சி அல்ல. அது இந்திய அரசியலமைப்பு வழங்கியிருக்கிற குறைந்தபட்ச அதிகாரத்தை வைத்துக் கொண்டு , பார்ப்பன-பனியா கூட்டு மிரட்டலுக்கும், வெளிப்படையான அத்துமீறலுக்கும் நடுவில் தன்னால் இயன்றளவு தம் மக்களுக்கான திட்டங்களைத் தான்கொண்ட கொள்கைப்படி செயலாக்கிட வேண்டும் என்கிற உறுதி கொண்டு பணியாற்றி வருகிற ஆட்சி என்பதை உணராதவர்கள் அல்லது உணர மறுக்கிறவர்கள் தான் மேற்கண்ட போராட்டக் காரர்கள். புரட்சிகர கண்டன்ட் ரைட்டர்கள்.

இது வெறும் திமுக எதிர்ப்புக்கு மட்டுமே பயன்படுமே அல்லாது சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கோ அவர்களின் வாழ்வியல் சிக்கலுக்கோ வழிகாணப் பயன்படாது என்பதைத் தெரிந்தே அவர்கள் இதைச் செய்கிறார்கள் என்பதுதான் பெரிய சோகம்.

இதுதான் எப்போதும் திமுக ஆட்சியின் அய்ந்தாம் ஆண்டில் பார்ப்பனர்களின் எதிர்பார்ப்புமற்றும் சூழ்ச்சித் திட்டம். அதற்கு இப்போது மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களின் போராட்டத்தைப் பயன்படுத்தி மிகச்சரியாகத் துணைபோகிறார்கள் இந்தப் புரட்சியாளர்கள்.

ஆனால் வழக்கம்போல் அல்ல, இந்தமுறை இந்த பார்ப்பன லாபி அடியோடு வெட்டி வீழ்த்தப்படும்.

ஆமாம், அக்கிரஹாரத்துஆசாபாசங்களுக்குத் துணை போவதைக் காட்டிலும், அறிவாலயத்துக்கு ஆதரவாக நிற்பதில்மான இழப்பொன்றும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் திமுகவை மக்கள் விரோதக் கட்சியாகக் காட்ட முனைந்து யோக்கியசிகாமணி பட்டம் பெறுவதை விட திமுகவின் தேவையைச் சொல்லி உங்களைப் போன்றவர்களின் இழிவுகளை எதிர்கொள்வதில் வரலாற்றுப் பிழையொன்றும் நேராது என்பதை உரக்கச் சொல்வோம்!

●

# ‘மக்களாட்சி’யின்வாக்குத் திருட்டு! எங்கே 65 லட்சம் வாக்காளர்கள்?

சாரதாதேவி

மக்களவையில் மூன்றாவது முறையாக 2024 இல் பெரும்பான்மை பெற்று ஆட்சியில் அமர்ந்திருக்கிறது பா.ஜ.க. அரசு. இரண்டாவது முறையான 2019இலேயே மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது. அப்போது எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரளாததால் தான் பா.ஜ.க வென்றது என்று அரசியல் நோக்கர்கள் விமர்சித்தார்கள். மூன்றாம் முறை, ஒரு சிலரைத் தவிர அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்ததால், பா.ஜ.க.வை வீழ்த்துவது உறுதி என நினைத்தோம். தேர்தல் முடிவுகள் நாளின் தொடக்கத்தில் நிலைமை அப்படித்தான் இருந்தது. இ.ந்.தி.யா. கூட்டணியின் எண்ணிக்கை குலையாமல் மேலேயே இருக்க, மாலை 5 மணி அளவில், பா.ஜ.க. கூட்டணி தோல்வி முகத்தில் இருந்த, கிட்டத்தட்ட 70 தொகுதிகள் அனைத்திலும் பா.ஜ.க.வெற்றி பெறுகிறது. மீண்டும் மக்கள் விரும்பாத ஆட்சியில் திணிக்கப்படுகிறார்கள்.

அப்போதே சந்தேகம் இருந்தது. இப்போது அது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 6 மாதங்கள் கடுமையாக, வாக்காளர் பட்டியலையும், களத்தையும் ஆய்வு செய்ததில், குறைந்தது 48 தொகுதிகளில் வாக்குத் திருட்டு நடைபெற்றுள்ளதாக எதிர்க்கட்சி மக்களவைத் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான ராகுல் காந்தி கண்டுபிடித்து, செய்தியாளர்களிடம் தக்க ஆதாரங்களுடன் நிரூபித்திருக்கிறார். முதலாவதாக காங்கிரஸ் ஆளும் கர்நாடகாவில், மகாதேவபுரம் என்னும் தொகுதியில் 1,00,250 வாக்குகள் முறைகேடாக, போலி வாக்காளர்கள், போலி முகவரிகள், படிவம் 6 முறைகேடுகள், ஒரு நபருக்கு பல வாக்குகள், புகைப்படங்கள் முறைகேடு என பல்வேறு வகைகளில் சேர்க்கப்பட்டது தெரிய வந்துள்ளது.

பீகாரில் தேர்தல் நெருங்கும் வேளையில், 65 லட்சம் வாக்காளர்களை நீக்கியிருக்கும் தேர்தல் ஆணையம், அதன் மூலம் தங்களுக்கு எதிரான சிறுபான்மையினரின் வாக்குரிமையையே பறித்திருக்கிறது என்று அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். 65 லட்சம் பேரும் புலம்பெயர்ந்தவர்கள் என்று அவர்களைத் தமிழ் நாட்டு வாக்காளர் பட்டியலில் சேர்த்து விடுவார்கள்




என்று அரசியல் தலைவர்கள் அச்சம் தெரிவித்து வருகின்றனர்.

இவ்வளவு சிக்கல்களை ஏற்படுத்தி இருக்கும் தேர்தல் ஆணையம், தன்னாட்சியாக இயங்க அரசமைப்பால் அதிகாரம் வழங்கப்பட்ட அமைப்பாக இருந்தும், குற்றச்சாட்டுகள் குறித்து கிஞ்சித்தும் கவலைப்படாமல், சலசலப்பு கூட இல்லாமல், ராகுலை பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யக் கோருகிறது. உச்ச நீதிமன்றம் வாக்காளர் பட்டியலைக் கேட்டும் தர மறுக்கிறது. எங்கிருந்து இவர்களுக்கு இத்தனை துணிவு வந்திருக்கிறது? இந்த முறை ஆட்சிக்கு வந்தவுடன் பா.ஜ.க.அரசு தலைமைத் தேர்தல் ஆணையரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை ஆளுங்கட்சிக்கு மடைமாற்றிக் கொண்டது. அதன் பரிந்துரையில் பதவிக்கு வந்த க்யானேஷ் குமார் வேறு என்ன செய்வார்?

ராகுல் காந்தி, கூட்டணிக் கட்சிகள், ஊடகங்கள், பொதுமக்கள் என எல்லாத் தரப்பின் முன்னால் தன் குற்றச்சாட்டுகளை ஆதாரங்களோடு முன்வைத்திருக்கிறார். எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் இரண்டு நாட்களாக அனுமதி கேட்டும், இந்த சிக்கல் குறித்து விவாதத்திற்குக் கூட எடுக்கப்படவில்லை. பீகாரில் 124 வயது என்று ஆணையத்தால் சொல்லப்பட்ட வாக்காளர் மின்டா தேவியின்பெயரைசட்டையில்அணிந்துநாடாளுமன்ற வளாகத்துக்கு வெளியே கூட்டணிக் கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தேர்தல் ஆணையம் நோக்கி அவர்கள் ஊர்வலம் செல்ல முயன்ற போது,

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## பெரியாரின் அடையாளம் ஜீன் ஜோசப்

திருநெல்வேலி மனோன்மணியம் பல்கலைக் கழகத்தின் 32ஆம் பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி, துணைவேந்தர் என்.சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

650 மாணவர்களுக்கு ஆளுநர் பட்டம் வழங்குவதன் அடையாளமாக, மாணவர்கள் தங்களின் பட்டத்தை ஆளுநரிடம் கொடுத்து வாங்கிச் சென்றனர்.

அதில் நாகர்கோயிலைச் சேர்ந்த ஜீன் ஜோசப் என்ற மாணவவி மட்டும் தன் பட்டத்தை ஆளுநரிடம் தராமல், துணைவேந்தரிடம் கொடுத்து, பின்னர் பெற்றுச் சென்றார். அவர் சொன்ன காரணம், 'தமிழ்நாட்டுக்கு ஏதும் செய்யாமல் எதிராக இருப்பவரிடம் பட்டம் வாங்க விருப்பமில்லை' என்பதுதான்.

உடனே அந்த மாணவியின் கணவர் தி.மு.கவைச் சேர்ந்தவர், கட்சியில் பெயர் வாங்க, திமுகவினர் அரங்கேற்றி வரும் தரங்கெட்ட நாடகங்களுக்கு, கல்வி நிலையங்களையும் பயன்படுத்துவது கண்டிக்கத்தக்கது என்று குதித்துவிட்டார் மாஜி பாஜக தலைவர் அண்ணாமலை.

நீட் தேர்வு, மும்மொழிக் கொள்கை உள்ளிட்ட அரசியல் பின்னணியைக் கல்வி நிலையங்களில் வைத்து ஆட்டம் ஆடுவது பாஜக என்பது அண்ணாமலைக்குத் தெரியாதா? மாணவர்களுக்கு அரசியல் சாயம் பூசக்கூடாது என்பதும் அவருக்குத் தெரியாதா?

ஆடு இலை, தழைகளைத்தான் தின்னும். இந்த ஆடு குப்பைகளைத் தேடுகிறது.

தந்தை பெரியார் பெண்களுக்குக் கொடுத்த சுயமரியாதையின் மற்றுமோர் அடையாளம் ஜீன் ஜோசப். வாழ்த்துவோம் அவரை!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்படுகின்றனர். ஆணையம் கொஞ்சமும் அசரவில்லை. அர்னாம் கோஸ்வாமிபோன்ற அரசியல் கோமாளிகளை வைத்து, குற்றச்சாட்டுகளை திசை திருப்பப் பார்க்கிறார்கள்.

பீகார், கர்நாடகத்தைத் தொடர்ந்து, கேரளாவின் திரிச்சூர் தொகுதியில் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, அங்கே மக்களவை உறுப்பினரும் ஒன்றிய அமைச்சருமான சுரேஷ் கோபிக்கு எதிராக போராட்டங்கள் வெடித்துள்ளன. மோடி தோல்வி முகத்திலிருந்து தப்பி, வெற்றி அடைந்த உத்தரபிரதேசத்தின் வாரணாசி தொகுதியின் முறைகேடுகள் வெளிவந்துள்ளன. ஒரு நபருக்கு 50 மகன்கள் இருப்பதாக வாக்காளர் பட்டியல் சொல்லியது, கொடுமை! மகாராட்டிரத்தின் பால்கார் தொகுதியில் ஒரு பெண்ணுக்கு ஒரே பக்கத்தில் 6 வாக்குகள் பட்டியலிடப்பட்டுள்ளன. வாக்குத் திருட்டு நடைபெற்றுள்ளதுஉண்மை. கையும் களவுமாக மாட்டிக்கொண்டாலும் தான் சீர்குலைத்து வைத்திருக்கும் அமைப்புகளின் வழி இன்னும் கொஞ்ச நாள் ஆட்சியில் நிலைத்திருக்க பா.ஜ.க. எல்லா சித்து வேலைகளையும் செய்யும். இதில் உச்ச நீதிமன்றத்தைக் கூட எந்த அளவு நம்ப முடியும் எனத் தெரியவில்லை. அவர்கள் கேட்கும் தரவுகளைக் கொடுக்க மறுக்கும் தேர்தல் ஆணையத்தின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அத்தோடு 5 கோடிக்கு மேல் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டால் (!) விடமாட்டோம் என தாராள வழி கொடுத்து ஒரு சின்ன மிரட்டல் விடுத்திருக்கிறது.

உச்சநீதிமன்றம் இறையாண்மை உள்ள அமைப்பாக இருக்குமானால், வழக்கை சரியாக எடுத்து, முறைகேடுகளை ஏற்று, தேர்தலையே செல்லாததாக செய்யலாம். மக்கள் விரும்பாத, மக்களாட்சியைத் திருடும் இந்த அரசை வீழ்த்தலாம். ஆனால், அரசின் ஊதுகுழலாக, பதவிக்கு நன்றி காட்டும் நீதிபரிபாலனம் இருக்குமானால், நாம் மக்கள் போராட்டங்களைத் தீவிரப்படுத்த வேண்டி வரும்.


தமிழ்நாட்டில் பூத் முகவர்களை வலிமைப்படுத்த வேண்டும் என முதல்வர் கூறி இருக்கிறார். இங்கு ஒரு வலிமையான கட்டமைப்பு இருப்பதால்தான் இதுவரை இங்கு அவர்களின் விளையாட்டுகள் எடுபடவில்லை. ஏனைய மாநிலங்களும், காங்கிரஸ் உள்ளிட்ட ஏனைய கட்சிகளும் இதுபோலத் தமிழ்நாட்டையும், தி.மு.க.வையும் பின்பற்றி வாக்காளர் பட்டியலையும், பூத் முகவர்களையும் வலுப்படுத்த வேண்டியது உடனடித் தேவை!

# கலைஞரின் படைப்புலகம்..!

நூல் அறிமுகம்

வெற்றிச்செல்வன்

ஒருமுறை நாகப்பட்டினத்தில் கலைஞர் எழுதிய 'சாந்தா அல்லது பழனியப்பன்' நாடகம் நடைபெற்றது. நாடகத்திற்குத் தலைமை தாங்கியவர் தந்தை பெரியார். அப்போது பேசிய பெரியார் "நாடகங்களையும் சினிமாக்களையும் பார்க்கக் கூடாது என்று சொல்லுபவனே இந்த நாடகத்திற்குத் தலைமை வகிக்கிறானே என்று நினைக்கலாம்........... இதுபோன்ற நாடகங்களை நான் எப்போதும் வெறுத்தது கிடையாது. பார்க்கக் கூடாது என்று சொல்லவில்லை. இங்கு நடைபெற்ற இந்த நாடகம் நல்ல பல கருத்துகளைப் போதிக்கிறது. நம்முடைய சீர்திருத்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு மக்களின் இழிவு நிலையைப் போக்கவும், மூடக் கொள்கைகளை ஒழிக்கவும் பயன்படும் வகையில் அமைந்திருக்கிறது" என்று கலைஞரைப் பாராட்டினார். நாடகம், திரைப்படம் போன்ற கலைகள் வெறும் பொழுதுபோக்கு அம்சங்களைப் போதிப்பதாக இல்லாமல், அவை மக்களுக்குத் தேவையான கருத்துகளைப் பரப்புவதைப் பெரியார் வரவேற்கவே செய்தார் என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.




திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புரை செய்வதற்காக ஓர் இயக்கமாகவே செயல்பட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். ஏறத்தாழ எண்பதாண்டு காலம் எழுத்துலகில் இடையறாது இயங்கியவர். அவரது நூற்றாண்டைக் கொண்டாடிய தமிழக அரசு, அண்மையில் அவரது படைப்புகளை நாட்டுடைமையாக்கி அவருக்குப் பெருமை சேர்த்தது. நூற்றாண்டு காணும் தமிழ் இலக்கிய ஆளுமைகளின் படைப்புகளைத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் தொகுத்து வெளியிட்டு வருகிறது. பாடநூல் கழகத்தின் ஆலோசகர் மூ. அப்பணசாமி பொதுப் பதிப்பாசிரியராக உள்ள இத்திட்டத்தின்கீழ், எழுத்தாளர் இமையம் தொகுத்துள்ள கலைஞரின் எழுத்துகள் "கலைஞரின் படைப்புலகம்" என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.

தன்னுடைய 14 வயதில் எழுதத் தொடங்கியவர் கலைஞர். சிறுகதைகள், கவிதைகள், உரை நூல்கள், நாவல்கள், நாடகங்கள், திரைக்கதை வசனங்கள், திரையிசைப் பாடல்கள் என்று அத்தனை துறைகளிலும் தனது தடத்தைப் பதித்துச் சென்றவர். அவருடைய படைப்புகளில் சிலவற்றை மட்டும் தேர்வு செய்து இத்தகையதொரு தொகுப்பைக் கொண்டு வந்ததற்காகவே பாடநூல் கழகத்தையும், எழுத்தாளர் இமயத்தையும் பாராட்டலாம்.

மழை வேண்டி ஒரு ஊரில் மாரியம்மனுக்குப் பூசை செய்கின்றனர். அந்தக் கிராமத்திற்கு வரும் குமரன் "உங்கள் கண்ணீரைக் கண்டு கருணை காட்டாத மாரி பன்னீரில் மயங்கி விடுவாள் என்றால் நீங்கள் அவளை ஏமாற்றுகிறீர்கள் என்றுதானே அர்த்தம்" என்று கேட்கிறான். கலைஞர் வசனம் எழுதிய 'நாம்' திரைப்படத்தில் இப்படி ஒரு காட்சி. இவ்வாறான பகுத்தறிவுக் கேள்விகளைக் கலைஞரின் பல படைப்புகளில் காணலாம். இதே போல பக்தியை வைத்து மக்களை ஏமாற்றும் சாமியார் கதாபாத்திரம், 'சங்கிலிச்சாமி' என்ற சிறுகதையில்.

மத நல்லிணக்கத்திற்குத் தனது அரசியல் வாழ்க்கையில் மட்டுமின்றி, தன்னுடைய படைப்புகளிலும் முக்கியத்துவம் தந்தவர் கலைஞர். அணில்குஞ்சு என்ற சிறுகதையில், அணிலை முன்வைத்து நடக்கும் மதப் பூசலையும் இறுதியில் அணிலுக்கு நேரும் பரிதாப முடிவையும் அழகாகக் காட்சிப்படுத்தியிருப்பார்.

தமிழர் வாழ்வியலையும், வாழ்வியல் விழுமியங்களையும் தனது படைப்புகளின் வழியாகக் கொண்டு சேர்த்தவர் கலைஞர். அவருடைய தொல்காப்பியப் பூங்காவும், சங்கத் தமிழும், வரலாற்றுப் புதினங்களும் இதற்கான சான்றுகளாகும். சிலப்பதிகாரக் கதையில், மாடலமறையோன் தனது வேள்விக் கலாச்சாரத்தை செங்குட்டுவனை வைத்தே புகுத்தியதை தொல்காப்பியப் பூங்கா நூலில் பதிவு செய்திருப்பார். ரோமாபுரிப் பாண்டியனும், தென்பாண்டிச் சிங்கமும் தமிழர் வரலாற்றுப் பெருமிதங்களாகப் படைக்கப்பட்டவை.

கலைஞரின் தன்வரலாறான நெஞ்சுக்கு நீதி அவருடைய வரலாறு மட்டுமல்ல; தமிழ்நாட்டின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது. ஆறு தொகுதிகளாக வெளிவந்த நெஞ்சுக்கு நீதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

கலைஞரின் படைப்புகள் மட்டுமின்றி, கலைஞரது படைப்புகள் குறித்த பல்வேறு ஆளுமைகளின் பார்வை இந்நூலின்கண் உள்ளன. தந்தை பெரியார் தொடங்கி பேரறிஞர் அண்ணா, தேவநேயப் பாவாணர் உள்ளிட்ட பலருடைய கருத்துகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கலைஞருடைய படைப்புகளைப் பற்றிய அறிமுகத்தை அறிய வேண்டிய அனைவரும் வாசிக்க வேண்டிய நூல் இது.

| | | |
|---|---|---|
| நூல் | : | கலைஞரின் படைப்புலகம்..! |
| தொகுப்பாசிரியர் | : | இமையம் |
| கிடைக்குமிடம் | : | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், நுங்கம்பாக்கம், சென்னை. |
| பக்கங்கள் | : | 609 |
| விலை | : | ரூ.665 |